**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**
**அ.வ.எண். 04/2013**

இந்நீதிமன்றத்து கிரேடு–3 பென்ஞ்ச் கிளார்க் திரு. இராஜாமுகம்மது அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 04** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 04.08.2025**

**பெயர் – நந்தினி**

**க/பெ – இராஜேந்திரன்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 3.36 பி.எம்.**

**குறுக்கு விசாரணை–**

1. இந்த வழக்கில் எனது பிரமாண வாக்குமூலத்ததை நான் தான் தாக்கல் செய்தேன். எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்று நினைவில் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்ததை தாக்கல் செய்வதற்கு முன்பே எனது வழக்கறிஞரை நான் பார்த்துள்ளேன். சுமார் 3 முறை வழக்கறிஞரை நான் பார்த்துள்ளேன். எனது பிரமாணவாக்குமூலத்தை தாக்கல் செய்வதற்கு முன்பு எத்தனை நாட்களுக்கு எனது வழக்கறிஞரை பார்த்துள்ளேன் என்றால் 2 மாதங்களுக்கு முன்பு. அதற்கு முன்பு பார்த்ததில்லை. செப்டம்பர் 2022 எனது பிராமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு 2013 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2 இந்த வழக்கிற்கான விவரத்தை இந்த வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள வாதிகளில் மூத்தவர்கள் தான் வழக்கறிஞருக்கு தகவல் கொடுத்து பிராதினை தயார் செய்தனர் என்றால் சரிதான். அதேபோல் வழக்கு தாக்கல் செய்வற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பு மூத்தவர்கள் தான் கொடுத்தனர் என்றால் சரிதான். மேற்சொன்ன மூத்தவர்கள் தற்போது உயிருடன் தான் உள்ளார்கள். எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரம் தெரியுமா என்றால் அப்போது படித்துள்ளேன் இப்போது நினைவில் இல்லை. மேற்சொன்ன மூத்தவர்கள் வேலைக்கு சென்று வருவதாலும் நான் இல்லத்தரசி என்பதாலும் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

3. தற்போது என்னுடன் வந்துள்ளவர் பெயர் கண்ணன் அவர் எனது பெரியப்பா மகன், அவர் என்னுடன் எல்லா வாய்தாவிற்கும் வருகிறார். மற்ற வாதிகள் வேலைக்கு செல்லவில்லை என்றும் அவர்களை விசாரித்தால் உண்மை வெளிவந்துவிடும் என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வேலைக்கு தான் செல்கிறார்கள். 2ம் வாதி எல்லா வாய்தாவிற்கும் என்னுடன் வருகிறார். அவர் வேலையை விட்டு விட்டுதான் என்னுடன் வருகிறார். இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் இந்த வழக்கில் சாட்சி கூற எனக்கு எந்த அருகதையும்

இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் சிறுவயதில் பார்த்துள்ளேன். நினைவு தெரிந்து நான் பார்தது இல்லை. எனவே இந்த சொத்தை யார் அனுபவித்து கொண்டு வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரிந்த வரை எனது பெரியப்பா பயிர் செய்தார். 1981 ஜனவரி முதல் வரதராஜநாயுடு அவருடைய சகோதர்கள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதன்பிற்பாடு மோகன்நாயுடுவிற்கு தாவாசொத்தும் மற்றும் 13 செண்ட் பதிவான பாகப்பிரிவினை பத்திரம் மூலம் 8ம் பிரதிவாதி மோகனநாயுடுவிற்கு வந்தது என்றால் அவர்களின் குடும்ப பாகப்பிரிவினை குறித்து எனக்கு தெரியாது. நான் போட்ட வில்லங்க சான்றிதழில் அந்த பாகப்பிரிவினை பத்திரம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. அந்த வில்லங்க சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் பாகப்பிரிவினை குறித்த விவரம் தெரியும் என்றால் சரியல்ல. மோகனநாயுடு தாவா சொத்தை அனுபவித்து வந்து அவரின் மகளான 9ம் பிரதிவாதி ஹேமலதாவிற்கு பதிவான செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. தாவ சொத்திற்கான பட்டாவும் மோகனநாயுடு பெயரில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சர்வே எண் 513 வடமேற்கில் உள்ள 13 செண்ட்டும் 9ம் பிரதிவாதியான ஹேமலதாவிற்கு உரிமையானது என்றால் சரியல்ல. வாய்மொழி கிரையம் ஆக இருப்பதால் அது வில்லங்கத்தில் வராததால் மோசபாபத்தாக இந்த சொத்தினை தவறான சங்கதிகளை வைத்து தாவாவினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

5. வாய்மொழி கிரையமாக 1981 ல் ஜனவரி ஆரம்பத்திலேயே எனது தந்தை மற்றும் அவரின் சகோதர்கள் தாவா சொத்து வாய்மொழியாக விற்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. தாவ சொத்தினை குறித்து ஸ்வாதீன அனுபவத்ததை காண்பிப்பதற்கு பட்டா, கிஸ்து ரசீது என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை, பெரியோர்களிடம் உள்ளதா என்று கேட்டால் தான் தெரியும். இந்த வழக்கில் மேற்சொன்ன பட்டா, கிஸ்து தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரம் தான் உள்ளது. பத்திரத்தின் அசலையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் உள்ளது. இந்த வழக்கின் முக்கியமான அசல் ஆவணங்களை மறைத்து தவறாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கு வாச்சா கிரையம் உண்மையானதாக உள்ளதால் தான் 1ம் பிரதிவாதி பத்மாவதியும் 2ம் பிரதிவாதியான திருமலையும் இவ்வழக்கில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல. ஸ்ரீனிவாச நாயுடு வகையறாவான 1 முதல் 7 பிரதிவாதிகள் அவர்கள் நாங்கள் அழைத்த பிறகும் இந்த வழக்கை தொடுக்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. வாச்சாகிரையம் ஏற்கனவே ஏற்பட்ட காரணத்தினால் தான் மேற்சொன்ன வகையறாக்கள் வழக்கை கூட்டாக தாக்கல் செய்ய முன்வரவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 04.10 பி.எம்.**